# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 01.04.2026

## முன்னிலை
## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 6550/F/2024**

திருமதி.அ.தனலெட்சுமி, -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
அரசு சார்புச் செயலாளர்,
தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், -- பொது அதிகார அமைப்பு
பிராட்வே, சென்னை-600 003.

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (01.04.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திருமதி.அ.தனலெட்சுமி, அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி அவரது மகன் வினோத்குமார் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.சோ.பரமசிவம், சார்பு செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை-3, திரு.சே.வெங்கடேசன், சார்புச் செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை-3, மற்றும் திருமதி.R.ராணி சௌந்தரம், அரசு சார்புச் செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை-3, ஆகியோர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்கள்.

2. மனுதாரர் 27.02.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், “ To kindly disclose year of 2005 to till date selected candidates of Junior Analyst in the Tamil Nadu Medical Subordinate Service list and name of candidates like Name, Register Number, Turn, order of Rotation, Date of Birth, Qualification” என்பன போன்ற தகவல்களை 5 இனங்களில் வழங்கக் கோரி பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 003 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து தகவல்கள் வழங்காத காரணத்தால் மனுதாரர் 06.04.2024 தேதியிட்டு பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவைப் பெற்ற பொதுத் தகவல் அலுவலர்/ அரசு சார்புச் செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை-03 அவர்கள் LetterNo.36-4/202/RID-1/2024, dated 30.04.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு இனம் வாரியாக தகவல்கள் வழங்கியுள்ளார். அதன் பின்னர் மனுதாரர் மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்து முழுமையான தகவல்கள் கிடைக்கப்பெறாத காரணத்தால், 19.05.2024 தேதியிட்டு பிரிவு 19(3)இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 01.04.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து LetterNo.36-4/202/RID-1/2024, dated 30.04.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் இனம் வாரியாக வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும் மனுதாரர் கோரிய Notification குறித்த தகவல்களையும் இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனக்கு பொது அதிகார அமைப்பால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு வழங்கப்பட்டுள்ள தகவல்களில் இனம் 1, 2 மற்றும் 5-க்கு முழுமையற்ற தகவல்களாக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து தனக்கு உரிய தகவல்களை பெற்றுத் தருமாறு ஆணையத்திடம் முறையிட்டார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு உரிய, சரியான தகவல்கள் LetterNo.36-4/202/RID-1/2024, dated 30.04.2024 தேதியிட்ட கடிதங்களின் வாயிலாக பொது அதிகார அமைப்பால் முழுமையான தகவல்கள் வழங்கியுள்ளதை இவ்வாணையம் உறுதி செய்து ஏற்கிறது. இருப்பினும், பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கிறது.

- ***மனுதாரர் 27.02.2024 தேதியிட்ட 6(1)-ன் கீழான மனுவில் கோரியுள்ள தகவல்கள் தேடி பார்த்து கிடைக்கப்பெறாத பட்சத்தில் அது குறித்து மனுதாரருக்கு ரூ.100/- மதிப்பிலான அரசு முத்திரைத் தாளில் பிரமாணப்பத்திரம் (Sworn Affidavit) ஒன்றினை மனுதாரருக்கு வழங்கிவிட்டு அதனை அவர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அறிக்கையினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 30.04.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடப்படுகின்றது.***

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 6550/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
அரசு சார்புச் செயலாளர்,
தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்,
பிராட்வே, சென்னை-600 003.

**<u>மனுதாரர்</u>**

திருமதி.அ.தனலெட்சுமி,
2/119-2, கீழத்தெரு,
புஞ்சை சங்கேந்தி கிராமம்,
இலால்குடி வட்டம்,
திருச்சி மாவட்டம்-621 711.

Copy to: File NS/PA-